

“விடுதலைப்புலிகள் இறுதிநாட்களில் சீருடைகளை அணியாமல் சாதாரண உடைகளையே அணிந்தனர்.” என கமலா தனது இளம்பராயத்தை கிளிநொச்சியில் கழித்ததையும் யுத்தத்தின் முந்தைய நினைவுகளையும் மீட்டிப்பார்த்தார். “அவர்கள் வீதியில் ஆயுதம் தரித்து நடந்துசெல்கையில் அவர்களை நான் பார்ப்பதற்கு ஓடிச்செல்வது வழமையாக இருந்தது.”

1971ஆம் ஆண்டு கமலா மன்னாரில் பிறந்தாரெனினும் மூன்று வயதில் கிளிநொச்சிக்கு தமது இருப்பிடத்தினை நகர்த்தினார். ஒரு மூத்த சகோதரியும் மூன்று இளைய உடன்பிறப்புக்களும் கொண்ட ஒரு பெரிய குடும்பத்திலேயே கமலா வளர்ந்தார். ஆரம்பகாலங்களில் அவரது சகோதரன் விடுதலைப்புலிகள் அமைப்பில் தன்னை இணைத்துக்கொண்டார் அதனைத் தொடர்ந்து குடும்பத்தில் ஒரு பெண்ணுடைய பங்களிப்பும் இருக்கவேண்டுமென கமலாவும்

அவரது சகோதரிகளும் உடன்பட்டனர். ஒவ்வொரு சகோதரிகளின் பெயர்களையும் எழுதி சீட்டுக்குலுக்கியபோது அவரது இளைய சகோதரி தெரிவானார், கமலாவே அவரது சகோதரியை அவர்களது முகாமுக்கு அழைத்துச் சென்றார். ‘‘அக்கணத்திலிருந்து போராட்டத்தில் எங்களுக்கு அதீத ஈடுபாடு உண்டாகியது.’’ என தமிழர்களுக்கான உரிமைகளுக்காக போராடும் தமது அதீத நோக்கத்தை மீட்டியவண்ணம் கமலா கூறுகிறார். அவரது மற்றைய இரு உடன்பிறப்புக்களைப்போலல்லாமல் ஊடகத்துறையில் உள்ள பேரார்வத்தினால் அதில் தன்னை ஈடுபடுத்தியதனூடாக போராட்டத்திற்கு தன்னால் இயன்ற பங்களிப்பை கமலா வழங்கினார்.

அவர் பல ஊடக நிறுவனங்களில் பணியாற்றி அரசாங்கத்திற்கெதிரான பல விமர்சனங்களை பலமாக ஒலிக்கச்செய்தார். மக்களுடைய பிரச்சனைகளையும் அவர்களுடைய தேவைகளையும் நெருக்கடிகளையும் தெரிவிப்பதன் மூலம் இவ்வமைப்பிற்கு துணைபுரிந்தார். ‘‘நான் களத்தில் ஒரு யுத்தம் புரிபவளாக இருக்கவில்லை ஆனால் என்னிடம் ஒரு பேனா இருந்தது, அதனால் நானும் ஒரு போராளியாகக் கருதப்பட்டேன்’’ எனக்கூறுகிறார். ‘‘ஊடகத்துறையானது எனது உயிரும் மூச்சும் ஆகும்.’’

யுத்தத்தின் இறுதிநாட்களில் பொக்கணை என்ற இடத்தில் கமலா தனது பாட்டியை ஒரு தாக்குதலில் இழந்தார். பின்னர் கமலாவும் அவளது தாயாரும் கொல்லப்பட பாட்டியின் நினைவலைகளைச் சுமந்தவாறு அப்பிரதேசத்தைவிட்டுச் சென்று ஒரு படகில் முள்ளிவாய்க்காலை நோக்கி பிரயாணிக்கத் தொடங்கினர். ‘‘நாங்கள் எங்களது பாட்டியின் பூதவுடலை மரியாதையுடன் ஈமைக்கிரியைகளைச் செய்யமுடியவில்லை. நாங்கள் அவரது உடலை ஒரு பகுங்குகுழியில் போட்டுவிட்டு அப்பாலே நடக்கத்தொடங்கினோம்’’

முள்ளிவாய்க்காலில் அவர்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்தமுடியாதிருந்தது. புல மக்களிடம் மூடிய பதுங்குகுழிகள் இல்லாதிருந்ததினால் கமலாவும் அவரது தாயாரும் தூசியினாலும் கற்களினாலும் எறிகணைத்துண்டுகளினாலும் மூடப்பட்டிருந்தனர். அதிஷ்டவசமாக முதல் சில நாட்களாக அவர்களுக்கு எத்தீங்கும் ஏற்படவில்லை ஆனால் அவர்களுடைய அதிஷ்டம்

கடைசிவரை நீடிக்கவில்லை. ஒரு நாள் அவர்களுடைய பதுங்குகுழிக்கு அருகில் ஒரு ஆர்.பி.ஜி எறிகணை வீழ்ந்து வெடித்ததில் அவர்கள் இருவருக்கும் காயம் ஏற்பட்டது. “ஆர்.பி.ஜி எறிகணையின் துண்டொன்று எனது தொடைப்பகுதியிலும் இன்னொரு துண்டொன்று எனது தலைப்பகுதியிலும் இறங்கியது. அங்கு வைத்தியசாலை எதுவுமிருக்கவில்லை அத்துடன் குருதி வடிந்தவண்ணம் இருந்தது” என அவர் தனது கடந்த கால நினைவுகளை மீட்டியபடி கூறினார். “குருதி வடிதலைக் கட்டுப்படுத்தும் பொருட்டு அணையாடை ஒன்றை (sanitary napkin) காயத்தின்மீது வைத்துக் கட்டினேன்.”

அவ்வேளை கமலாவும் அவரது தாயாரும் ஒரு மதபோதகருடனும் ஒரு மக்கள் குழுவுடனும் பிரயாணம் செய்துகொண்டிருந்தனர். சிலர் தம்முடன் தங்கியிருக்குமாறு கேட்டுக்கொண்டனர். ஆனால் கமலாவும் அவரது தாயாரும் அவர்கள் வழங்க முன்வந்த உதவியினை மறுத்துவிட்டு அவர்களை அந்த இடத்தை விட்டு புறப்படும்படி வேண்டினார்கள். “அவர்கள் எங்களுடன் இறந்துவிட நாம் அனுமதிக்கக்கூடாது” என கமலா விபரித்தார். ஏனெனில் கடந்த நாளில் நிகழ்ந்த சம்பவம் ஒன்றை அவர் கூறினார். கமலா வைத்தியசாலைக்கு ஒரு பேரூந்து ஒன்றில் பயணித்துக்கொண்டிருந்தபோது மன்னாரைச் சேர்ந்த ஒரு பையனை சந்தித்தார். ஆந்தப் பையன் தனது பெற்றோரை தவறவிட்டதுடன் அவனிடம் எந்தவித பணமும் இல்லாதிருந்தது. ஆகவே கமலா அவனுக்கு இரண்டாயிரம் ரூபா பணத்தை தனது வங்கிக் கணக்கிலிருந்து மீளப்பெற்று எடுத்துக் கொண்ட பணத்திலிருந்து கொடுத்தார். தாராளகுணம் என்பது அசாதாரணமானது. அதே விதமான உதவியை கமலா வேறொருவரிடமிருந்து பெற்றார். அந்த இறுதி யுத்த காலக் குழப்பங்களிலும் ஒருவருடைய இரக்கம் இன்னொருவரை வாழவைப்பதற்கு உறுதுணையாக இருந்தது.

இறுதி யுத்தத்தில் யாரோ ஒருவர் கொடுத்த தவறான தகவலையடுத்து கமலா ஒரு போராளி என்று குற்றம் சுமத்தப்பட்டு கைதுசெய்யப்பட்டார். அவர் ஏறத்தாள இரண்டு வருடங்கள் சிறையில் அடைக்கப்பட்டு அங்கு சிறைச்சாலையின் துன்பத்தையும் கொடூரத்தையும் அவர் தாங்கினார்:

சிங்கள பெண் பொலிசாரும் கழிப்பறைகளைப் பயன்படுத்துவதால் அவை எப்போதும் நிறைந்திருப்பதால் நாங்கள் அவற்றை சுத்தம் செய்தோம். கழிப்பறைகளை நாம் பயன்படுத்துவதற்காக பொலித்தீன் பைகளை கையுறைகளாக அணிந்தபடி மலக்குழியினுள்ள மலத்தை வாளிகளைக்கொண்டு அப்புறப்படுத்தினோம். அவை மிகவும் பயங்கரமான தருணங்களாக இருந்தன. இராணுவத்தினர் எப்போதும் எம்மை நோக்கி விசிலடித்து எம்மை கேலி செய்தவாறு இருந்தனர்.

பாதுகாப்பின் நிமித்தம் அங்கு எந்தவித இரகசியத்தன்மைக்கும் இடமில்லை. ஊடுருவும் கண்காணிப்புக்காக உயரமான மதில்களும் அடிக்கடி நிகழும் இராணுவ சோதனைச் சாவடிகளும் எம்மீது திணிக்கப்பட்டன. ''எங்கள் எல்லோருக்கும் அது மிகுந்த வேதனையைக் கொடுத்துக்கொண்டேயிருந்தது.'' முள்ளிவாய்க்காலில் உயிர்தப்பிப்பிழைத்தது இதற்காகத்தானா என கமலா வினவுகிறார். “அவர்கள் எம்மை விடுவித்தபோது நாங்கள் ஏதேனும் அரசியல் செயற்பாடுகளில் அல்லது அரசாங்கத்திற்கெதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டால் மறுபடியும் நாங்கள் கைதுசெய்யப்படுவோம் என கூறியே அனுப்பினார்கள்.'' கமலா மேலும் குறிப்பிடுகையில் அவ்வாறு நிழ்ந்திருந்தால் அவர்களது பெயரும் காணாமலாக்கப்பட்டவர்களுடைய பட்டியலில் இடம்பெற்றிருக்கும்.

கமலாவின் இளைய சகோதரி யுத்தத்தில் இறந்தார். அவளுடைய சகோதரன் இன்னமும் உயிருடன் இருக்கிறார் என கமலாவும் அவரது குடும்பமும் நம்பியிருப்பினும் அவர் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. கமலா கிளிநொச்சியில் தனது தாயாருடன் அமைதியாக வாழ்ந்து வருகிறார். இலங்கையின் பிந்தைய யுத்தத்தின் மோசமான யதார்த்தமானது கமலாவில் பிரதிபலிக்கின்றது. “இந்த யுத்தத்தில் நாங்கள் வெற்றியடைவோம் என்றும் எமது சொந்த நிலங்களுக்கு சுதந்திரமாக சென்றுவிடுவோம் என்றும் யுத்தத்தின் இறுதித்தருணம் வரை எங்களுக்கு நம்பிக்கையிருந்தது'' என கமலா கூறுகிறார்.'' இதனை நாம் உறுதியாக நம்பினோம்.'' என அவர் கூறினார். இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் நாம் சென்றால் அங்கு எம்மால் உறுதியாக உயிர்தப்பிப் பிழைக்கமுடியாது என்பதால் அவர்களுடைய கட்டுப்பாட்டு பிரதேசத்திற்குள் செல்ல அவர்களுக்கு விருப்பமில்லாது இருந்தது.

கமலாவும் அவரது தாயாரும் நலிவுற்றிருப்பதுடன் எதிர்காலத்தைப் பற்றிய ஒரு நம்பிக்கையினை இழந்தவர்களாக இருப்பதுடன் விரக்தின் விளிம்பிலேயே வாழ்கின்றனர்:

> இப்போதுள்ள வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா? நாங்கள் உண்மையாக வாழ்ந்துகொண்டிருக்கிறோமா? நாங்கள் பல துயரங்களுக்கு மத்தியிலேயே உயிர்தப்பிப்பிழைத்துக்கொண்டிருக்கின்றோம். நாம் அதில் எல்லாவற்றையும் கூறமுடியாது ஏனெனில் அத்தகைய வாழ்க்கை கடினமானது. நாங்கள் பெண்கள் என்றவகையில் மட்டும் பாதிக்கப்படவில்லை மாறாக ஆதரவாளர்கள், மாவீரர் குடும்பம் போன்ற அனேக காரணங்களுக்காக பாதிப்புக்குள்ளாகியிருக்கிறோம்.